செய்தி வெளியீடு எண்:923 நாள்:22.10.2021

# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
# செய்தி வெளியீடு

## 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள் ஆய்வு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமையகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில் பாலாஜி அவர்கள் இன்று (22.10.2021) ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மற்றும் இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 20.06.2021 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமையகத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு சிறப்பான மின் சேவையை வழங்குவதற்காக 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தை தொடங்கி வைத்தார்கள். மின்னகம் தொடங்கப்பட்ட 20.06.2021 முதல் 21.10.2021 வரை 4,14,152 புகார்கள் பெறப்பட்டு அதில் 4,06,846 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மின்னகத்தில் மின் நுகர்வோர்களால் பெறப்பட்ட 98% புகார்களுக்கு இதுவரை தீர்வு காணப்பட்டுள்ளது.

இதுவரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த ஐந்து மாதங்களில் தமிழ்நாட்டில் 25,292 மின் கம்பங்கள், மாற்றப்பட்டுள்ளன தாழ்வான நிலையிலிருந்த மின் கம்பிகள் 48,279 இடங்களில் சரி செய்யப்பட்டுள்ளன, 700 மின் பெட்டிகள் (பில்லர் பாக்ஸ்) உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் 7,000 சாய்ந்த மின் கம்பங்கள் சரி

செய்யப்பட்டுள்ளன. 13,500 பழுதடைந்த பீங்கான், இன்சூலேட்டர்கள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன அதே போல் பழுதடைந்த நிலையில் இருந்த 1,400 மின் பெட்டிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதியதாக 8,905 புதிய மின்மாற்றிகள் அமைக்கும் பணியில் இதுவரை 3,337 புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. இது போன்று பல்வேறு நடவடிக்கைகளை மின்சார வாரியம் எடுத்து வருகிறது. மின்னகத்தில் மீதம் உள்ள 2 சதவிகித புகார்களுக்கு விரைந்து துறைவாரியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பருவமழை காலத்தை எதிர்கொள்ள மின்சார வாரியம் பல்வேறு முன்னேற்பாடுகளை செய்துள்ளது. குறிப்பாக 93,881 மின் கம்பங்கள், 19,826 கி.மீ மின் கம்பிகள், 4,600 மின்மாற்றிகள், 15,600 கி.மீ தாழ்வழுத்த புதைவடங்கள், 50 கி.மீ அளவிற்கு உயரயழுத்த புதைவடங்கள் தற்போது தயார் நிலையில் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வாரியத்தின் நிறுவுதிறன் 4,320 மெகாவாட் ஆகும். இதில் கடந்த கால ஆட்சியில் 1,800 மெகவாட் அளவு தான் உற்பத்தி செய்தார்கள். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான அறிவுரைகளை பின்பற்றி சொந்த உற்பத்தி தற்போது 3,500 மெகாவாட் அளவிற்கு உயர்ந்துள்ளது.

கன்னியாகுமரியில் மழையினால் பாதிக்கப்பட்ட 101 மின்மாற்றிகளில் 14 மின்மாற்றிகள் பழுதடைந்தன. அவற்றை சரிசெய்ய மதுரை மற்றும் திண்டுக்கலிலிருந்து மின் மாற்றிகள் கொண்டுவரப்பட்டு அனைத்தும் சரி செய்யப்பட்டுவிட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு நல்லாட்சியினை, மக்களுக்கான ஆட்சியினை நடத்தி வருகிறது. எந்தவித ஆதாரமும் முகாந்திரமும் இல்லாமல் அரசினை குற்றம் சொல்லுவது, அரசின் மீது தவறான மாயையை உருவாக்குவது போன்ற செயல்களில் சிலர் ஈடுபடுகிறார்கள். எந்த இடத்திலாவது தவறு ஏற்பட்டிருப்பின் சரியான ஆதாரத்தை அவர்கள் காண்பித்து தவறை நிரூப்பிக்கலாம். வங்கியில் இருந்து மின்பகிர்மான வட்ட அலுவலகத்திற்கு பணம் பரிமாற்றம் செய்யப்பட்ட கணினி எக்சல் சீட்டினை காண்பித்து தவறு ஏற்பட்டுள்ளதாக கூறுவது ஏற்புடையதா....? என்பதை மக்கள்தான்

முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தினமும் மின்வாரியத்தின் செயல்பாடுகளை கண்காணித்து தமிழ்நாட்டு மக்களுக்கு சிறப்பான மின்சேவையை வழங்க உத்தரவிட்டு மின்சார வாரியம் அதற்கேற்ப பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மக்களுக்கான சேவை செய்வதில் முழுகவனத்தையும் திருப்பி, தவறான, ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் பதில் அளித்துக் கொண்டு நேரத்தை வீணடிக்காமல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படியும், ஆலோசனையின்படியும் மின்சார வாரியம் சிறப்பான மின் சேவையை தொடர்ந்து வழங்கி வரும் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் கூறும் குறைகளை சரி செய்து சிறப்பான நிறுவாகத்தை முன் எடுப்போம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆசியுடன் மிளிரும் மின்சார துறையாக தமிழ்நாடு மின்சார வாரியம் இருக்கும்.

இவ்வாறு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9